கருத்தரங்க ஆலோசனைக் குழு

Dr. Chithirai Pon Selvan	John Curtin Distinguished Professor, Director of Research, Head of School – Science & Engineering, Curtin University, Dubai.
Dr. Ravindaran Maraya	Head, Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences, University of Malaya
Dr.Parvathi Wajindram	Senior Lecturer, Faculty of Arts and Social Sciences, University of Malaya.
முனைவர் வெ.இராமு	உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.
முனைவர் மேஷாக்	தமிழ்த்துறைத்தலைவர், சென்னைக் கிறித்துவக் கல்லூரி, தாம்பரம் – 59.
முனைவர் D. டேவிட் ஸ்டான்லி	தமிழ்த் துறைத்தலைவர், இலொயோலா கல்லூரி, சென்னை-34
முனைவர் ஞா. பெஸ்கி	தமிழ்த் துறைத்தலைவர், தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி.

பதிவுக்கட்டணம் செலுத்தும் வங்கி விவரம்

வங்கியின் பெயர் : INDIAN OVERSEAS BANK

கிளை : VETTAVALAM

Account No : 280801000000735

IFSC No : IOBA0002808

MICR Code : 606020016

ஆய்வுச் சுருக்கம் அனுப்ப வேண்டிய கடைசி நாள்: **20.12.2026**

முழுக் கட்டுரை அனுப்ப வேண்டிய கடைசி நாள்: **29.01.2026**

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி

tamilkatturai@lcv.edu.in

கருத்தரங்க நாள்: 17.02.2027.

கட்டுரையாளர்கள் அனைவரும் தவறாமல் கீழே உள்ள படிவத்தினைப் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

பதிவு செய்ய கீழே சொடுக்கவும் அல்லது (SCAN) வருடவும்

Click Here

நூல் அஞ்சல்

தமிழ் இலக்கியங்களில் இயற்கைச் சூழலியல் - பன்னாட்டுக் கருத்தரங்கம் -2027

அனுப்புநர்

துறைத்தலைவர்,
தமிழ்த்துறை,
இலொயோலா கல்லூரி, வேட்டவலம்.
திருவண்ணாமலை மாவட்டம் – 606 754.

பெறுநர்

.....

.....

.....

.....

LOYOLA COLLEGE

Affiliated to Thiruvalluvar University, Accredited by NAAC with B+ Grade (1st Cycle)

VETTAVALAM - 606754, TIRUVANNAMALAI DISTRICT.

வீரமாமுனிவர் தமிழ் இலக்கிய மன்றம்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தமிழ் இலக்கியங்களில் இயற்கைச் சூழலியல்



நாள்:17.02.2027



இனிய பெருந்தகையீர்

வணக்கம். உலகளாவிய கல்விச் சேவைப் புரிந்து வரும் சென்னை இலொயோலா கல்லூரி இயேசு சபை அருள்தந்தையர்களால், கிராமப்புற மாணாக்கர், முதல் தலைமுறைப் பட்டதாரிகள், மூன்றாம் பாலினத்தவர் போன்றோர் கல்வி கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கோடு திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலத்தில் 2009-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது இலொயோலா கல்லூரி. 10 இளநிலை, 2 முதுநிலைத் துறைகளுடன் செயல்பட்டு வரும் இக்கல்லூரி வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது மற்றும் தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவினரால் B+ தரம் பெற்றுள்ளது.

தமிழ்த்துறை

இலக்கியம், இலக்கணம், மொழியியல், கல்வெட்டியல், சுவடியியல் ஆகிய தளங்களில் தடம் பதித்து வரும் தமிழ்த்துறை 2009-ஆம் ஆண்டு மொழிப் பாடத்துறையாகத் தொடங்கப்பட்டு, 2019-ஆம் ஆண்டு இளங்கலைத் தமிழ்த்துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. இத்துறையில் கடந்த 2024 ஆம் ஆண்டு தற்காலத் தமிழ்க் கிறுத்துவ இலக்கியங்களில் விளிம்பு நிலை மாந்தர்கள் என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டு ஆய்வுக் கோவையாக வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2026 – 2027 ஆம் கல்வியாண்டில் **"தமிழ் இலக்கியங்களில் இயற்கைச் சூழலியல்"** என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்திட எத்தனித்துள்ளோம்.

கருத்தரங்க நோக்கம்

தமிழ் இலக்கியங்கள் மனித வாழ்வையும் இயற்கையையும் பிரிக்க முடியாத ஒன்றாகக் கருதுகின்றன. குறிப்பாக **சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை** இயற்கை, மனித உணர்வுகள், வாழ்வியல், பண்பாடு, தொழில், பொருளாதாரம் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையதாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறது. எனவே, தமிழ் இலக்கியங்களில் இயற்கைச் சூழலியல் பற்றிய பார்வையை ஆராய்வது இன்றைய காலத்தில் மிகவும் அவசியமானதாகிறது. அதனை வெளிக்கொணரும் நோக்கோடு இக்கருத்தரங்கு திட்டமிடப்பட்டுள்ளமையால், பின்வரும் ஆய்வுக் களங்களைப் பொருண்மையாகக் கொண்டு கட்டுரைகள் அமையலாம்.

ஆய்வுக் களங்கள்

- **திணைச் சூழலியல்**
- **நீர்ச் சூழலியல்**
- **தாவரச் சூழலியல்**
- **விலங்கு மற்றும் பல்லுயிர்ச் சூழலியல்**
- **வேளாண் சூழலியல்**
- **மனிதன்–இயற்கை உறவு**
- **இயற்கை வழிபாடும் சூழலியலும்**
- **சூழலியல் அறமும் நிலையான வாழ்வியலும்**
- **நவீனத் தமிழ் இலக்கியங்களில் சூழலியல்**
- **கடல்சார் சூழலியலும் தமிழிலக்கியங்களும்**
- **காடுசார் சூழலியலும் தமிழிலக்கியங்களும்**
- **காலநிலை மாற்றமும் தமிழ் இலக்கியங்களும்**
- **தமிழ் இலக்கியங்களில் இயற்கை வளப் பாதுகாப்பும் மேலாண்மையும்**
- **தமிழ் இலக்கியங்களில் சூழலியல் பேரிடர்களின் பதிவுகள். மேலும் இதுபோன்ற பொருண்மைகளில் ஆய்வுக்கட்டுரைகள் அமையலாம்.**

கட்டுரையாளர்களின் கவனத்திற்கு

- பல்கலைக்கழக, கல்லூரிப் பேராசிரியர்கள், ஆய்வு மாணாக்கர், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், திறனாய்வாளர்கள், கல்வியாளர்கள், சமூகச் சிந்தனையாளர்கள் மற்றும் சூழலியல் ஆர்வலர்கள் போன்றோர் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கலாம்.
- கட்டுரையுடன் முழு முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண் ஆகியவற்றையும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
- கட்டுரைத்தலைப்பு,கட்டுரையாளர் பெயர், பணியிடம் அல்லது பயிலும் இட முகவரி, ஆய்வுச்சுருக்கம், முன்னுரை, கட்டுரை, தொகுப்புரை, முடிவுரை, அடிக்குறிப்பு, துணைநூற்பட்டியல் என்னும் அமைப்பு முறையில் ஆய்வுக்கட்டுரை இருத்தல் வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரைகள் A4-அளவுத் தாளில் 1.5 இடைவெளியுடன் ஒருங்குறி எழுத்துரு [Unicode] வடிவில் எட்டுப்பக்கங்களுக்கு மிகாமல் கணினியில் தட்டச்சு செய்து, சொற்செறிவுக் கோப்பாக [Word Document File] மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கட்டுரை தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வரவேற்கப்படுகின்றன.
- கட்டுரைகளைத் திருத்தவோ சுருக்கவோ கருத்தரங்க ஆலோசனைக் குழுவிற்கு உரிமை உண்டு.
- ஆய்வுக் கட்டுரைகள் தரமும் தகுதியும் உடையதாகவும் ஆய்வுநெறியைப் பின்பற்றியும் அமைதல் வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரைகள் மதிப்புரையாளர்களின் ஏற்பினைப் பெற்று ISBN குறியீட்டுடன் நூலாக வெளியிடப்பட்டு, கருத்தரங்க நாளன்று கட்டுரையாளர்களுக்கு வழங்கப்படும்.
- பேராசிரியர்கள் மற்றும் தமிழார்வலர்களுக்குக் கட்டணம் ரூபாய் 750/-,
- ஆய்வு மாணவர்களுக்கு ரூபாய் 500/-,
- பங்கேற்பாளர்கள் ரூபாய் 200/-, செலுத்திச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.
- அயல் நாட்டுப்பேராளர்கள் இந்திய மதிப்பில் ரூ 1200/ மட்டும்.

புரவலர்கள் மற்றும் கருத்தரங்கத் தலைமை

அருள்முனைவர் **பிரான்சிஸ் P. சேவியர் , சே.ச.**

துணைத்தலைவர் & அதிபர்

அருள்முனைவர் **ஜெயராஜ் போனிபேஸ் , சே.ச.**

செயலர்

முனைவர் **M. சிவக்குமார்,**

முதல்வர்

முனைவர் நா. முரளி – 9176750796

கருத்தரங்கத் தலைவர்& தமிழ்த்துறைத் தலைவர்

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் ஆ. லியோகிளமண்ட் – 9500423370

பேரா. த. விநாயகம் - 9944797325

வீரமாமுனிவர் தமிழ் இலக்கிய மன்றத் தலைவர்,

துணை ஒருங்கிணைப்பாளர்கள்

- பேரா. **அ.ஷீலா**
- பேரா. **ஆ. ஆரோக்கியதாஸ்**
- பேரா. **ச.சுந்தரேசன்**
- முனைவர் **ச.சிவகுமார்**
- முனைவர் **க. குலோத்துங்கன்**
- முனைவர் **ம. லூர்துராஜ்**